# EARLY MARRIAGE AND ITS IMPACT ON MUSLIM WOMEN (BASED ON SAMBUNAGAR & AALANGULAM AREAS)

**L.F Hilma(1), M.M Siyana(2), M.F.M Hifra(3), F Rakshana(4)**

Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka
hilmun95@gmail.com, ramithsiyana@gmail.com

**ஆய்வு சுருக்கம்**

பல்வேறுபட்ட சமூகவியல் காரணிகளின் அடிப்படையில் பெண்களின் திருமண வயது முற்படுத்தப்படுகின்றது. இலங்கைச் சட்டத்திற்கு அமைவாக பெண்களின் திருமண வயதானது சர்ச்சைக்குள்ளான ஒரு பகுதியாகவே காணப்படுகிறது. இலங்கையில் பல இடங்களில் இளவயது திருமணம் அதிகரித்துக் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் அட்டாளைச்சேனை சம்புநகர் மற்றும் ஆலங்குளம் பிரதேச முஸ்லிம் பெண்களின் திருமண வயது மிகவும் குறைவானதாகவே உள்ளது. இவ்வாய்வு அப்பிரதேசத்தில் இளவயது திருமணத்தின் காரணங்களை இனங்கண்டு அத்திருமணம் அவர்களின் வாழ்வில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகிறது எனவும் எவ்வாறான பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் அப்பெண்கள் முகங்கொடுக்கின்றனர் என்பதையும் கண்டறிவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். சமூகவியல் கலப்பு ஆய்வான இதில் முதலாம் நிலைத்தரவுகளாக பிரதேச முஸ்லிம் பெண்களிடம் பெறப்பட்ட வினாக்கொத்து, கலந்துரையாடல் என்பனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வு தொடர்பான முன்னைய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வு பிரதேச முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணத்திற்கான காரணங்களில் பொருளாதார பிரச்சினை, காதல் விவகாரம், வழக்காறு என்பன முக்கியமாக அமைவதுடன் அத்திருமணத்தின் மூலம் அப்பெண்கள் உடல், உள, சமூக, பொருளாதார ரீதியான பல பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்நோக்குகின்றனர் என்பது கண்டறியப்பட்டது. மேலும் அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆலோசனைகளும் இவ்வாய்வில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திறவுச் சொற்கள்:** சம்புநகர், ஆலங்குளம், முஸ்லிம் பெண்கள், இளவயது திருமணம், தாக்கங்கள்

## ஆய்வு அறிமுகம்

இஸ்லாம் பரிபூரண வாழ்க்கைத் திட்டம் என்ற வகையில் அது குடும்ப வாழ்க்கைக்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இஸ்லாம் திருமணத்தை மனித சமூகத்தைப் பாதுகாக்கும் இறைவனின் ஏற்பாடாக சுட்டிக் காட்டுகின்றது. ''வாலிபார்களே! உங்களில் எவருக்கேனும் திருமணம் செய்ய வசதி இருந்தால் திருமணம் செய்து கொள்ளட்டும். அது (அந்நியப் பெண்களை) பார்ப்பதை விட்டும் பார்வையைத் தடுக்கும். மர்மஸ்தானத்தை பாதுகாக்கும். திருமணம் செய்ய வசதியற்றோர் நோன்பு நோற்கட்டும். அது தவறுகளில் இருந்து அவரைத் தடுக்கும்.''(புஹாரி-5066, முஸ்லிம்-3400) எனவே மனித சமூகத்தைப் பாதுகாப்பதற்கென அமைக்கப்பட்ட திருமணம் ஆரோக்கியமானதாக இருக்க அல்லாஹ் சில விதிமுறைகளையும், சட்டதிட்டங்களையும், விதிவிலக்குகளையும் வகுத்துத் தந்துள்ளான்.

இலங்கை பொது சட்டத்திற்கு அமைவாக திருமண வயதெல்லை 18 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம் தனியார் சட்டத்தில் ஆகக்குறைந்த திருமண வயது 12 என நிர்ணயிக்கப்பட்டமை

முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒரு சவாலாக அமைகின்றது. கணிசமான வீதத்தில் இளவயது திருமணங்கள் நடந்தேறுகின்றன என்பதால் முஸ்லிம்களின் திருமண வயது தொடர்பான பல விமர்சனங்கள் எழுந்த வண்ணமே உள்ளது. 2004 ஆம் ஆண்டு சாவித்திரி குணசேகரவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை ஆதாரம் காட்டி “18 வயதுக்கு குறைந்த இலங்கைப் பெண்கள் உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் திருமணத்திற்கும், கருவை சுமப்பதற்கும் பொருத்தமானவர்கள் அல்ல” என்று சப்ரா ஸாஹித் மற்றும் ஹைசிமா ஹாமின்-2017 தமது ஆய்வில் கூறுகின்றனர். (இஸ்லாமிய சிந்தனை, 2017) மேலும் சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்துவதோடு, உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளும் மறுக்கப்படுகின்றன. வறுமை, பாலியல் நெறிபிறழ்வு அபாயம் போன்ற காரணங்களால் இள வயது திருமணங்களை ஆதரிக்கவோ, மறுதலிக்கவோ முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் முஸ்லிம்களின் திருமண வயதெல்லை விவாதங்களுக்கும், முரண்பாடுகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் மத்தியில் உள்ளது. இவ்வயதெல்லையானது முஸ்லிம்களுடன் மாத்திரம் சம்பந்தப்பட்டதோ அல்லது இலங்கையுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சினையோ அல்ல. மாறாக இன, மத வேறுபாடுகளின்றி வளர்ந்த நாடுகள், வளர்முக நாடுகள் என்ற வித்தியாசம் பாராது இது பல்வேறு சமூகங்களுக்கும் மத்தியிலும் காணப்படுகின்ற சர்வதேச பிரச்சினையாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை அதிகபட்ச இளவயது திருமணங்கள் அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம், கொழும்பு மற்றும் சில பகுதிகளிலும் இடம் பெறுகின்றன. (சூளனி கொடிகாரர் ,1999) மேலும் இளவயது திருமணமானது ஏனைய நாடுகளான பங்களாதேஷில் 68% வீதமும், மாலைதீவில் 65.5% வீதமும், நேபாளத்தில் 56% வீதமும், மற்றும் இந்தியாவில் 50% வீதமும் காணப்படுகின்றன. ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கையில் இளவயது திருமணம் குறைவாக இருப்பினும் 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் 20,780 திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன என ஆய்வு குறிப்பிடுகின்றது. (UNICEF CHILD MARRIAGE BE SELINE, 2015) மேலும் சர்வதேச பெண்கள் பிரச்சினைக்கான ஆய்வு மையத்தின் (ICRW) ஒரு அறிக்கையில் உலகில் பல பாகங்களிலும் வருடாந்தம் 15 மில்லியன் பெண்கள் 18 வயதாவதற்கு முன்பே திருமணம் புரிகின்றனர் என தகவல் வெளியிட்டுள்ளது. (இஸ்மத் ரஸ்மி, 2017)

எமது ஆய்வு பிரதேசமான அட்டாளைச்சேனை 94.495 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டதும், 48,808 மக்கள் சனத்தொகையைக் கொண்டதுமான அழகிய கிராமமாகும். இப்பிரதேசம் 18 கிராம பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 17 கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இங்கு பிரிவு 5 இல் சம்புநகர், முல்லைத் தீவு, புறத்தோட்டம் ஆகிய 3 கிராமங்களில் 306 குடும்பங்கள் உள்ளன. அதில் 75 குடும்பங்கள் சம்புநகரில் மட்டும் வாழ்வதுடன் 17 ஆம் பிரிவான ஆலங்குளம் 488 குடும்பங்களையும் கொண்டு காணப்படுகின்றன.

பின்தங்கிய கிராமங்களாகக் கருதப்படும் இங்கு சிலர் அங்கவீனர்களுக்கான அரசாங்க வீட்டுத்திட்டத்தின் கீழ் வாழ்கின்றனர். கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் போன்ற துறைகளில் வளர்ச்சி குன்றிய நிலையிலும் பிரதானமாக கூலித் தொழிலை கொண்டவர்களுமே அதிகம் காணப்படுகின்றனர். வெளிப் பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்பு குறைந்த மக்களாகவும், போக்குவரத்து வசதிகள் அற்றவர்களாகவும், மார்க்க அறிவினையும் ஏனைய கல்வி அறிவினையும் பெற்றுக் கொள்ளும் சூழல் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும் அவ்வூர் பெண்களின் திருமண வயது தொடர்பாக இலங்கை சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வொன்றை மேற்கொண்ட போது 18 வயதிற்கு கீழ் இளவயது திருமணம் புரிந்தவர்களே அதிகமானோர் உள்ளனர் என்பது அறியப்பட்டது.

இங்கு ஆரம்ப காலக் கட்டங்களில் இருந்து இளவயதுத் திருமணம் நடைமுறையில் உள்ளது. 1970க்கு முற்பட்ட காலங்களிலும் 12 வயதிற்கு கீழ்பட்ட பெண்கள் திருமணம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இங்குள்ளவர்கள் கல்வி கற்பதற்கு சிரமத்தை எதிர்நோக்குவதனால் பாடசாலையிலிருந்து இடைவிலகி திருமணம் புரிகின்றனர். மேலும் குடும்பத்தில் நிலவும் வறுமை காரணமாகவும் இக்கிராம மக்களின் வழக்காற்றின் படியும், வெளி ஊரிலிருந்து கூலித்தொழிலுக்கு வருபவர்களுடன் இப்பெண்கள் காதல் வயப்பட்டு திருமணம் செய்கின்றமையும் இளவயதுத் திருமணம் அதிகரிக்க முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. மேலும் இத்திருமணத்தால் அவர்கள் பல பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர் அது அவர்களின் வாழ்வில் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான காரணங்களினால் அதிகரித்து வருகின்ற இளவயது திருமணம் பற்றிய விழிப்பூட்டலையும், எதிர்கால வாழ்க்கையின் குறிக்கோளையும், கல்வியின் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தி இளவயதுப் பெண்களின் எதிர்காலத்திற்கு ஒரு ஆலோசனையாக இவ் ஆய்வு அமைகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

- சம்புநகர் மற்றும் ஆளங்குளம் பிரதேசத்தில் இளவயது திருமணம் இடம் பெற்றுள்ளதா என கண்டறிதல்.
- அப்பிரதேச முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணத்தினால் ஏற்பட்டள்ள தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.
- அங்கு இளவயது திருமணத்தினுடைய விழிப்புணர்வு, அறிவு என்பன தற்போது பெண்களிடத்தில் காணப்படுகின்றனவா என கண்டறிதல்.
- திருமண வாழ்வை தொடர்வதிலுள்ள சவால்கள் மற்றும் பிரச்சினைகளை அடையாளங்காணல்.

**ஆய்வு வினா**

இதன்படி இவ் ஆய்வானது பின்வரும் வினாக்களுக்கு விடைகாண முயல்கிறது.

1. இரண்டு பிரதேசங்களிலும் இளவயது திருமணம் புரிவதற்கான முக்கிய காரணம் என்ன?
2. இளவயது திருமணத்தின் மூலம் அப்பெண்களின் வாழ்வில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளனவா?
3. இளவயது திருமணம் பற்றிய போதிய அறிவு அம்மக்களிடம் காணப்படுகிறதா?

**ஆய்வின் முக்கியத்துவம்**

இலங்கை முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணத்தினை மதிப்பிடுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் சம்புநகர் மற்றும் ஆலங்குளம் பிரதேச முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணத்தின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கான முதல் முயற்சியாக இவ் ஆய்வு காணப்படுவதால் இது முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் பிரதேச எதிர்கால சந்ததியினருக்கு சில ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் உள்ளடக்கியிருப்பதால் இவ்ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

அத்துடன் முஸ்லிம் தனியார் சட்டத்திலுள்ள திருமண வயதெல்லையை கூட்ட அல்லது குறைக்க இத்தரவுகள் உதவக் கூடியதாக உள்ளது. மேலும் இளவயது திருமணம் தொடர்பான ஏனைய ஆய்வுகளுக்கு இத்தகவல்கள் உதவக்கூடியதாகவும் அமைவதால் இவ் ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

சம்பு நகர் மற்றும் ஆளங்குளம் பிரதேச முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணம் அவர்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தி செல்கிறதா? என்ற கேள்வியே இவ் ஆய்வின் பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வு சமூகவியல் மற்றும் கலப்பு ஆய்வாக அமையப்பெறுவதால் இதில் முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் நிலைத்தரவுகளாக: ஆய்வு பிரதேசத்திலுள்ள இளவயது திருமணம் புரிந்தவர்கள், அவர்களின் பெற்றோர்கள், பள்ளித்தலைவர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோரிடம் நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் மற்றும் வினாக்கொத்து என்பன பயன்படுத்தப்பட்டு இவ் ஆய்விற்கு தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் 563 குடும்பங்களில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களிலுள்ள 50 பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்து மற்றும் அவதானிப்பு முறைகளில் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இந்த தகவல்கள் MS EXCEL மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

சம்புநகர் மற்றும் ஆலங்குளம் பிரதேச முஸ்லிம்களில் 563 குடும்பங்களில் இருந்து எழுமாறாக 50 குடும்பங்களிலுள்ள பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் 50 பேருக்கு வினாக்கொத்து கொடுக்கப்பட்டது. மேலும் பள்ளித் தலைவர், கிராம உத்தியோகத்தர் ஆகியோருடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டாம் நிலைத்தரவுகளாக: ஆய்வு தொடர்பான நூல்கள், முன்னைய ஆய்வுகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், அறிக்கைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

இத்தலைப்பினைப் பொருத்தமட்டில் இதுவரையில் பல ஆய்வுகள் உலகின் பல பகுதிகளிலும் ஆய்வு செய்யப்பட்டு வந்துள்ளதுடன் பல கட்டுரைகளும் எழுதப்பட்டு வந்துள்ளன. அதில் சில மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

இஸ்லாமிய சிந்தனை எனும் சஞ்சிகையில் (பெப்ரவரி-மார்ச் 2017) முஸ்லிம் பெண்களின் திருமண வயதெல்லையும் நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் தனியார் சட்டமும் ஓர் இஸ்லாமிய நோக்கு எனும் தலைப்பில் கலாநிதி அஸ்ஸெய்க் இஸ்மத் ரம்சி(நளீமி) அவர்களால் எழுதப்பட்ட ஆய்வில் முஸ்லிம் பெண்களின் திருமண வயது, நடைமுறை திருத்தம் என்பவற்றை இஸ்லாமிய போக்கில் எடுத்துக் கூறியுள்ளார். இரண்டாம் நிலைத் தரவுகளின் மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் முஸ்லிம் பெண்களின் திருமண வயது 16 ஆக மாற்றப்பட்ட வேண்டும் என ஆலோசனை முன்மொழியப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் இளவயது திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன என யுனிசெப் வெளியிட்ட அறிக்கையின் படி போதிய அறிவின்மை, பொருளாதார சூழல் என்பனவே இளவயது திருமணத்தின் முக்கிய காரணம் என இலங்கைக் காண வதிவிட பிரதிநிதி ரீசா ஹொசைனி தெரிவித்துள்ளார் என சுட்டிக்காட்டுவதுடன் இத்திருமணத்தின் மூலம் பெண்கள் மன உளைச்சல், சுகாதார சீர்கேடு மற்றும் சிசு மரணம் என்பன அதிகரிக்கிறது என அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் IIPS இனால் 2009 இல் ரவி பிரகாஸ், அபிஸேக் சிங்க், பிரவீன் குமார் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட இந்த பண்பு ரீதியான ஆய்வில் இளவயது திருமணத்தின் மூலம் இந்தியப் பெண்களிடம் ஏற்பட்ட உடலியல் ரீதியான தாக்கம் பற்றியும் அதன் மூலம் ஏற்பட்ட நோய், உடலியல் கோளாறு, தாய் பிள்ளை இறப்பு, பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் அதில் ஏற்படும் தாக்கம் என்பனவும் கண்டறியப்பட்டன. இளவயது திருமணத்தின் மூலம் பல்வேறு சுகாதார பிரச்சினை ஏற்படுகிறது என இவ் ஆய்வில் முடிவு காணப்பட்டுள்ளது.

இளவயது திருமணத்தின் நன்மை தீமை எனும் தலைப்பில் ஆய்வு ஒன்று 2014 மலேசிய இஸ்லாமிய விஞ்ஞான பல்கலைக்கழக மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. இதில் இளவயது திருமணத்தின் நன்மைகளாக கற்பு பாதுகாப்பு, ஒழுக்க நெறி ஏற்படுவதாகவும், தீமைகளாக உடலியல் மற்றும் உணர்வுசார் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் கூறவதுடன் இளவயது திருமணம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் பற்றிய விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.


இளவயது திருமணமும் பெண்களின் தொழில் மீதான பாதிப்புகளும் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் வட ஆபிரிக்க நாடுகளை மையப்படுத்திய ஆய்வு தலைப்பில் ராகுல் அசாத், கரோலின், இரேனி செல்வானுஸ் போன்றோரால் 2017 ஏப்ரலில் இக்கலப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் இளவயது திருமணத்தினால் பெண்களின் தொழில் தடைகள் பற்றியும் அதற்கான ஆலோசணைகளும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தவிர இலங்கையிலும் உலகின் பல நாடுகளிலும் இளவயது திருமணத்தினை பற்றியும் அதன் விளைவுகள், தாக்கங்கள் பற்றியும் பல நூல்களும், ஆய்வு கட்டுரைகளும், இணையத்தள வெளியீடுகளும் வெளியிடப்பட்ட வண்ணமே உள்ளன.

**<u>கலந்துரையாடல்களும் அடைவுகளும்</u>**


இவ் ஆய்வில் அட்டாளைச்சேனைனப் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்புநகர் மற்றும் ஆலங்குளம் முஸ்லிம் பெண்கள் 50 பேரை எழுமாறாகக் கொண்டு பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ் ஆய்வு பிரதேசத்திலுள்ள பெண்கள், பள்ளித்தலைவர், கிராம அலுவலகர் போன்றோருடன் கலந்துரையாடி தகவல்கள் பெறப்பட்டன. இதில் சில தகவல்கள் ms excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்திலுள்ள திருமணமான முஸ்லிம் பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட 50 வினாக்கொத்துக்கள் மற்றும் நேர்காணல்களின் படி பெறப்பட்ட விபரங்கள் பின்வருமாறு

இவ்வாய்வு பிரதேசங்களில் திருமணமான பெண்களிடம் எழுமாறாக வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் படி 1970-1980 இற்கு இடையில் திருமணம் புரிந்தோர் 12 பேர், 1981-1902 இற்கு இடையில் திருமணம் புரிந்தோர் 2 பேர், 1991-2000 இற்குஇடையில் திருமணம் புரிந்தோர் 12 பேர், 2001-2010 இற்குஇடையில் திருமணம் புரிந்தோர் 10 பேர், 2011-2020 இற்கு இடையில் திருமணம் புரிந்தோர் 14 பேர் என்பன குறிப்பிடத்தக்கவை.





இப்பிரதேசத்திலுள்ள பெண்களில் தற்போது மணவாழ்க்கையினைத் தொடர்பவர்கள் விவாகரத்துப் பெற்றவர்கள் மற்றும் இளம் விதவைகளும் உள்ளனர்.

இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் இளவயது திருமணம் மேற்கொண்டமைக்கான காரணங்களினை பின்வரும் வரைபின் மூலம் அறியலாம்.





மேற்குறித்த வரைபின் அடிப்படையில் ஆளங்குளத்தில் பொருளாதாரக் காரணிகள் 25% ஆகவும் காதல் விவகாரங்கள் 32 % உம் கல்வியறிவின்மை 5 % உம் வழக்காறுகளின் படி 23 % உம் ஏனையவை 15 % உம் காணப்படுகின் றன.





மேற்குறித்த வரைபின் அடிப்படையில் சம்பு நகரத்தில் பொருளாதாரக் காரணிகள் 26% உம், காதல் விவகாரங்கள் 29% உம், கல்வியறிவின்மை 6% உம், வழக்காறுகளின் படி 21% உம், ஏனையவை 18% உம் காணப்படுகின்றன.

ஆலங்குளம் மற்றும் சம்புநகர் பிரதேசங்களிலுள்ள திருமணமான பெண்களின் எண்ணிக்கை வயது அடிப்படையில் பின்வருமாறு:




இப்பிரதேசத்தில் திருமணமான பெண்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் படி 12-14 வயதுக்கு உட்பட்டவர்கள் 5 பேரும், 15-16 வயதுக்கு உட்பட்டவர்கள் 15 பேரும், 17-18 வயதுக்கு உட்பட்டவர்கள் 12 பேரும், 18-20 வயதுக்கு உட்பட்டவர்கள் 7 பேரும் உள்ளனர், மேலும் 25-30 வயதுக்கு மேற்பட்டவர்கள் 7 பேரும் உள்ளனர் என்பது இனங்காணப்பட்டது. திருமணமான 50 பேரில் 32 பேர் 18 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பதால் அவ்விரு ஊர்களிலும் 64% வீதமானோர் இளவயது திருமணம் புரிந்துள்ளார்கள் என கண்டறியப்பட்டது

கீழேயுள்ள படத்தின் மூலம் இளவயது திருமணத்தினால் ஏற்படும் பாதகங்களினை இலகுவாக அறியலாம். அந்தவகையில் அப்பெண்கள் உடலியல் ரீதியில், உளவியல் ரீதியில், பொருளாதார ரீதியில், சமூக ரீதியில், கல்விசார் ரீதியில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதில் பொருளாதாரப் பிரச்சினைகளையே அதிகமாகமானோர் எதிர்கொள்கின்றனர்.




இப்படத்தின் மூலம் இளவயது திருமணம் மேற்கெண்ட பெண்களில் சிலர் குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் பல பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர் என்பது அவதானிப்புக்களில் இருந்து அறிய முடிந்தது. அதிக மன உளைச்சல், தேவையற்ற சிந்தனை, முறையற்ற பாலியல் புரிதல், பயம், கணவனை விட்டு ஒதுங்குதல், முரண்பட்ட மனநிலை, மன அழுத்தம் என்பன உளவியல் தாக்கங்களாகவும் சிசு மரணம், அதிக இரத்தப் போக்கு, பலவீனமான உடல், கர்ப்பப்பை கோளாறு என்பன உடலியல் தாக்கங்களாகவும் வறுமை, பட்டினி, கடன், அன்றாட தேவை பூர்த்தியாகாமை, தொழிலின்மை, வீடின்மை என்பன பொருளாதார தாக்கங்களாகவும் சுய மதிப்பு குறைவு, நெறிபிறழ்வு, மூடநம்பிக்கை

அதிகரித்தல், சீரற்ற கல்வி, மார்க்க அறிவின்மை, ஒதுங்கி வாழல் என்பன சமூக தாக்கங்களாகவும் காணப்படுகின்றன.

இளவயது திருமணம் பற்றிய அறிவும், நாட்டிலும் முஸ்லிம் தனியார் சட்டத்திலும் பெண்களின் மட்டுபடுத்தப்பட்ட திருமண வயது பற்றிய விழிப்புணர்வும் உள்ளதா என்ற ஆய்வை மேற்கொண்ட போது தெரிவு செய்யப்பட்ட 50 பெண்களில் 39 பேர் மட்டுமே அது தொடர்பான அறிவுள்ளவர்களாக இருப்பதுடன் மற்றைய 11 பேரும் போதிய அறிவற்றவர்களாகவே உள்ளனர். எனினும் தற்போது தமது அனுபவங்களின் மூலம் அறிவை பெற்றவர்களாக அப்பெண்கள் திகழ்கின்றமையால் இனி வரும் காலங்களில் இளவயது திருமணம் தொடர்பாக தாம் அவதானிப்புடன் இருப்பதாகவும் கூறியமை ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களாகும்.

**முடிவு**

இலங்கையில் முஸ்லிம்களின் மத்தியில் இளவயது திருமணம் அதிகரித்து வருகின்றது என்ற அறிக்கையின் அடிப்படையில் முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணமும் அதன் தாக்கமும் என்ற தலைப்பில் சம்புநகர் மற்றும் ஆலங்குளம் பிரதேசத்தை மையப்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு இவ்விரண்டு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பெண்களின் இளவயது திருமணத்திற்கான காரணங்களில் மிகப் பிரதானமானது காதல் மற்றும் பொருளாதார பிரச்சினை என்பன காணப்படுகின்றமை கண்டறியப்பட்டது. மேலும் இளவயது திருமணத்தின் மூலம் ஏற்பட்ட பாதிப்புகளில் உடலியல் மற்றும் உளவியல் தாக்கங்களே அதிகம் எனவும் கண்டறியப்பட்டது. அத்துடன் இளவயது திருமணம் பற்றிய விழிப்புணர்வு ஆரம்பத்தில் இல்லை எனவும் தற்போது சிறிதளவு அறிவு தம்மிடம் உள்ளதாகவும் தமது பிள்ளைகளுக்கு இளவயதில் திருமணம் புரிந்து வைக்க மாட்டோம் எனவும் கூறியமை குறிப்பிடத்தக்கது. அவ்விரண்டு பிரதேச முஸ்லிம் ொண்களுக்கு இளவயது திருமணம் பற்றிய விழிப்புணர்வை சரியாக கொடுப்பதன் மூலம் அதன் தாக்கத்தை தவிர்த்துக் கொள்ளலாம் என்பதே இவ் ஆய்வின் முடிவுகளாகும்.

**ஆலோசணைகள்**

- பாடசாலை இடைவிலகளைத் தடுத்து கல்விக்கான ஆர்வத்தை கூட்டி அவர்களை கல்வி கற்க செய்தல்.
- திருமணம், இளவயது திருமணம் பற்றிய விழிப்புணர்வை பிரதேச மஸ்ஜித், நிறுவனங்கள் மூலம் அம்மக்களுக்கு வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.
- கஷ்டப்படும் மக்களுக்கு உதவிகளை ஏற்படுத்தி சுய தொழில் வசதிகளை செய்து கொடுக்கலாம்.
- போக்குவரத்து வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் பாடசாலை இடைவிலகளை தடுக்கலாம்.
- பால்ய வயதிலுள்ள பெண் பிள்ளைகளை அழைத்து திருமணம் தொடர்பான விழிப்புணர்வை கொடுப்பதோடு பெற்றோருக்கும் அறிவுரைகளை வழங்க வேண்டும்.

**உசாத்துணைகள்**

1. Jovanie, C., Espesor Engr., Vasma, A., Hassan,. Elsie Villanueva, S., The impact of early marriage practices. A study of two indigenous communities in South-General Mindano (T'boli

and blaan) from a human and child rights perspective, mindanao state university-general santos city.

2. Muhammad auwal sulaiman,. (July.2015). Early marriage in islam : in the light of modern challenges, department of Islamic studies nasarawa state university NSUK.
3. Nursaidhul aqilah che alias,. nurul nabilah bt zainol,. Dr. Ramiada darmi,. (5 June 2014). Adavantages and Disadvantages of early marriage, Islamic science university of Malaysia.
4. Ragui assaad, caroline krafft ,. Irene selwane, (april 2017) the impact of early marriage on woman’s employment in the middle east and north Africa.
5. Ravi Prakash,. Abhishek Singh,. Praveen Kumar Pathak,.(May.31.2011),.early marriage poor reproductive health status of mother and child well-being in india, [online];Available:http://jfprhc.bmj.com/content/early/2011/05/31/jfprhc-2011-0080. full.html#ref-list-;Accessed: (2018.06.24).
6. UNICEF, Innocent Research Centre. *Earlymarriage Child Spouses. (*17th July) ISSN: 1020-3528. Retrieved. [online]: available: http://www.unicef-icdc.org , Accessed: (2018.06.15).
7. கலாநிதி அஷ்ஷெய்க் முகம்மத் இஸ்மத் ரம்ஸி.முஸ்லிம் பெண்களின் திருமண வயதெல்லையும் நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் தனியார் சட்டமும் ஓர் இஸ்லாமிய நோக்கு. (பெப்ரவரி-மார்ச் 2017). இஸ்லாமிய சிந்தனை. நளீமியா வெளியீடு, பேருவலை.
8. சூளனி கொடிக்கார.(1999).இலங்கை முஸ்லிம் குடும்ப சட்டம்,முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னனி, இலங்கை.
9. மன்ஸுர்.எம்.ஏ.எம்,.(2017).முஸ்லிம் தனியார் சட்டம்-சில அம்சங்கள், இலங்கை.